## திராவிட இயக்க இதழ்கள் - ‘ஹோம்லேண்ட்’


HOME LAND
Tall talks of
Tata-fed Congress
POLITICAL CLIMATE POLLUTED

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1957-ஆம் ஆண்டு ஜூன் 9 அன்று தொடங்கி நடத்திய ஆங்கில இதழ் ‘ஹோம்லேண்ட்’. இது வார இதழாக வெளிவந்தது. 1960-ஆம் ஆண்டு வரை அந்த இதழ் வெளிவந்தது.

அந்த இதழுக்கு ஆசிரியராக அண்ணாவே இருந்தார். அதில் அலசல் கட்டுரைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. திராவிட நாட்டின் நோக்கத்தை, ஆங்கிலத்தில் கொண்டு செல்ல வேண்டும் என இந்தப் பத்திரிகையைத் தொடங்கினார் அண்ணா.

தேசியம், தேசம், பொருளாதாரம், அரசியலமைப்பு, சட்டம், சர்வதேச நிகழ்வுகள் போன்ற பல துறைகள் சார்ந்து, நிறைய கட்டுரைகள் வெளிவந்தன. சில ஆண்டுகளுக்கு முன், அவை தொகுக்கப்பட்டு மின் நூலாகவும் வெளியிடப்பட்டன.

‘குறைந்தபட்சம் ஆயிரம் கோடி ரூபாய் நிதியாவது சென்னை மாநிலத்துக்கு ஒதுக்குக’ என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரை, ‘அனைவரையும் உள்ளடக்கும் திட்டம்’ (இன்க்ளூசிவ் பிளான்) என்கிற புதிய கருத்தை முன்மொழிந்திருந்தது குறிப்பிடத்தக்கது. அந்த இதழில், திருச்சி எம்.எஸ்.வெங்கடாசலம், இரா.செழியன் எம்.பி. ஏ.எஸ்.வேணு, வழக்கறிஞர் வி.பி.ராமன் போன்ற கழக எழுத்தாளர்கள் துணை ஆசிரியர்களாகப் பணியாற்றினார்கள்.

இந்த இதழுக்கு நிதி உதவி செய்ய, அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் அண்ணா எழுதி நடித்த நாடகம் ஒன்றும் மேடையேற்றப்பட்டது.

## :ப்ளாஷ்பேக்





கோவை அபு

### முரசொலிக்கு வாகனம் தந்த தளபதி!

2010-ஆம் ஆண்டு கோவை மாவட்டம், அவரப்பாளையத்திற்கு இன்றைய கழகத் தலைவர், அன்றைய துணை முதலமைச்சர் தளபதி அவர்கள் அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக வருகை தந்திருந்தார். அப்போது, நடைபெற்ற திருமண நிகழ்வின் ஒரு பகுதியாக, கழகச் செயல்வீரர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த பிள்ளையாம் ‘முரசொலி’ நாளிதழ் விநியோகம் செய்ய டி.வி.எஸ். எக்ஸ்.எல் இருசக்கர வாகனத்தை எனக்கு வழங்கினார். அப்போது எடுத்துக் கொண்ட புகைப்படம் இது.

**- கோவை அபு, மாவட்ட அமைப்பாளர்,**
**தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை,**
**கோவை மாநகர மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### சர்ச்சையான நாடகம்!

1944-ஆம் ஆண்டு, கலைஞரின் முதல் நாடகமான ‘சாந்தா என்ற பழனியப்பன்’ திருவாரூர் பேபி டாக்கீஸ்ஸில் அரங்கேற்றம் கண்டது. அதன் பின்னர், நடிகர் எம்.ஆர்.ராதாவுக்காக ‘தூக்குமேடை’ நாடகத்தை எழுதினார். இந்த நாடகம், தஞ்சாவூரில் கருந்தட்டாங்குடி எனும் இடத்திலிருந்த கிருஷ்ணா தியேட்டரில் அரங்கேறியது. மேடையேற்றப்பட்ட காலத்தில் இந்நாடகம் அரசியல் அரங்குகளில் பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

## முதன் முதலில் 28

**ந.வினோத்குமார்**

திராவிட இயக்க அடையாளங்களை, நடைமுறைகளைப் பற்றி விளக்கும் ‘திராவிட மரபு’ தொடர் இது...

# வேர்களுக்கும் விழுதுகளுக்கும் விருது!







சாதனையாளர்களுக்கு அளிக்கப்படும் மரியாதையே, விருதுகளும் பட்டங்களும் பரிசுகளும்தான். அறிவியல் அரங்கில் ‘நோபல் பரிசும்’, கலைத்துறையில் ‘ஆஸ்கர் விருது’களும் உலகப் புகழ் பெற்றவை. இந்தியாவிலும் விருதுகளுக்குப் பஞ்சமில்லை. பத்ம விருதுகள் தொடங்கி, ‘சாகித்ய அகாடமி விருது’ வரை அவற்றின் அரசியல், பல பரிணாமங்களைக் கொண்டவை.

அரசியல் அரங்கில் பகுத்தறிவு, சுயமரியாதை, சமூக நீதி நோக்கில் திராவிட இயக்கங்களும் விருதுகளை அளிக்கின்றன. அவை சாதனையாளர்களுக்கான அங்கீகாரம் அல்ல. சமூக நீதிக்கு தன்னை ஒப்புக்கொடுப்பவர்களை உலகுக்கு அடையாளப்படுத்தும் ஒப்பற்ற பெருமிதமாக ஒளிர்கின்றன.

கழக வரலாற்றில் அவ்வாறு முதன்முதலாகச் சிறப்பிக்கப்பட்டவர், திராவிடப் போராளி ‘மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்’. அவருக்கு 1956-இல் அண்ணா அவர்கள் ’சுயமரியாதை இயக்க வீரர்’ என்ற விருதை வழங்கினார். அந்த விருதைப் பெற்ற ஒரே ஆளுமை அவர்தான். அந்தப் பெயர் அன்றும் இன்றும் நிலைத்து நிற்கிறது.

அந்த வகையில், கழகத்தின் முப்பெரும் விழா விருதுகள், திராவிட அரசியலை உயர்த்திப் பிடிப்பவர்களின் கலங்கரை விளக்கமாக உள்ளது.

தந்தை பெரியாரின் பிறந்தநாள், பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள், கழகம் தோற்றுவிக்கப்பட்ட நாள் ஆகியவை செப்டம்பர் மாதத்தில் 15 முதல் 17 தேதிக்குள் இருப்பதால், அவற்றை மையப்படுத்தி முப்பெரும் விழாவாக நடத்தவும், அந்த நிகழ்வை திராவிடச் சிந்தனை ஆளுமைகளைப் பெருமைப்படுத்தும் நிகழ்வாகவும் மாற்றினார் கலைஞர்.

தமிழ்நாட்டில் முதன்முதலில் மூன்று விருதுகள், ஒரு நோக்கத்துக்காக, ஒரே மேடையில், 1985-ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக, 40 ஆண்டுகளாக அளிக்கப்பட்டு வருவது அரசியல் சாதனையாகும்.

கட்சியில் களப்பணித் தொண்டர்கள், தலைமைப் பண்புடன் வளர்ந்து வரும் நிர்வாகிகள், சமூக நீதிக் களத்தில் தோழமையுடன் களமாடுபவர்கள் எனப் பலரும் கழகத்தின் விருதினால் பெருமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

தொடக்கத்தில், ‘பெரியார் விருது’, ‘அண்ணா விருது’, ‘கலைஞர் விருது’ ஆகிய மூன்று விருதுகள் மட்டுமே வழங்கப்பட்டு வந்தன. 2000-ஆம் ஆண்டு முதல் ‘பாவேந்தர் விருது’ம் சேர்த்துக் கொள்ளப்பட்டு, ஆண்டுதோறும் நான்கு விருதுகள் வழங்கப்பட்டு வந்தன. 2018-ஆம் ஆண்டு முதல் பேராசிரியர் பெயரிலும் விருது வழங்கப்படுகிறது.

இன்னும் சில நாட்களில் முப்பெரும் விழா கொண்டாட்டத்துக்குத் தயாராகி வருகிறது கழகம். கழகத்தின் ‘பவள விழா ஆண்டு’, ‘முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாள் நூற்றாண்டு நிறைவு’ என இன்னும் பல முக்கியத்துவங்களுடன் பெருமைப்படுகின்றன, தமிழ்நாட்டின் மதிப்பு மிக்க விருதுகள்.

**...முற்றும்.**


**மூன்று விருதுகள், ஒரு நோக்கத்துக்காக, ஒரே மேடையில், 1985-ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக, 40 ஆண்டுகளாக அளிக்கப்பட்டு வருவது அரசியல் சாதனையாகும்.**

## பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ்** 28

“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...

# மக்களை வென்ற வியூகங்கள்!




‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ என்று தொடங்கிய 2024-மக்களவைத் தேர்தல் பரப்புரை, ‘நாற்பதுக்கு நாற்பது’ என்ற வரலாற்று வெற்றியை நமக்குப் பெற்றுத் தந்தது. முன்னதாக முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில், 2004-ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் ‘நாற்பதுக்கு நாற்பது’ இடங்களை தி.மு.கழகக் கூட்டணி வசமாக்கி இருந்தது, சரியாக 20 ஆண்டுகள் கடந்து, இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வரலாற்று வெற்றியைக் கழகத்திற்குப் பெற்றுத் தந்துள்ளார்கள்.

இத்தகைய வெற்றி சாதாரணமாக விளைந்த ஒன்றல்ல, 2023-ஆம் ஆண்டு கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளான மார்ச் 1 அன்று ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் தொடங்கியது, 2024-மக்களவைத் தேர்தலுக்கான தயாரிப்பு. இந்தக் கூட்டத்தில்தான் இந்தியா கூட்டணிக்கு விதையிடப்பட்டது, அதைத் தொடர்ந்து மண்டல வாரியாக வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் கூட்டம், அகில இந்திய அளவில் இந்தியா கூட்டணிக் கூட்டம், தேர்தலின் கதாநாயகனான ‘தேர்தல் அறிக்கை’ வெளியீடு, பிரச்சாரக் கூட்டம் எனப் பெரும்பணியை மேற்கொண்டார் கழகத் தலைவர். இந்தப் பெரும்பணி எப்படி வரலாற்று வெற்றியை, ஈட்டித் தந்தது என்பது குறித்து, கழகத் தலைவர் அவர்கள் எழுதி இருக்கும் நூல்தான் **‘தென்திசையின் தீர்ப்பு’**. தலைமைக் கழக வெளியீடாக இந்நூல் வெளியாகி இருக்கிறது.

2024-மக்களவைத் தேர்தலில் 40/40 வெற்றியை தி.மு.கழகம் எப்படிச் சாத்தியமாக்கியது? தொகுதிப் பங்கீடு, வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்களுக்கு அளிக்கப்பட்ட பயிலரங்கம், தேர்தல் அறிக்கை, கழக வேட்பாளர்கள், பிரச்சாரக் கூட்டங்கள், ஊடகங்களுக்குக் கழகத் தலைவர் அளித்த சிறப்புப் பேட்டிகள், தி.மு.க.வின் தேர்தல் விளம்பரங்கள், தேர்தல் முடிவுகள், கழகத் தலைவர் அவர்கள் இதுவரை வென்ற தேர்தல்கள், என அத்தனையையும் விரிவாகப் பதிவு செய்திருக்கிறது இந்நூல். 40/40 வரலாற்றுச் சாதனை போல இந்தப் புத்தகமும் ஓர் வரலாற்றுத் தேர்தல் ஆவணமாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது.

பல்வேறு தரவுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள இந்த நூல் பா.ஜ.க., அ.இ.அ.தி.மு.க. போன்ற மக்கள் விரோத கட்சிகளை எப்படி வீழ்த்துவது என்று நினைக்கும் அனைவருக்குமான கையேடு என்றே சொல்லலாம். 2024-மக்களவைத் தேர்தலுக்கு அமைக்கப்பட்ட வியூகத்தில் தொடங்கி, படிப்படியாக எப்படி இரண்டு கட்சிகளையும் எதிர்கொண்டோம் என்பதை இந்நூல் காலவரிசையை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

வெற்றி பெற்ற பிறகு மக்களவை உறுப்பினர்களிடையே கழகத் தலைவர் ஆற்றிய உரையும்,“ பா.ஜ.க.வுக்குப் பெரும்பான்மை கிடைக்காமல் செய்த 2024-வரலாற்று வெற்றியோடு நின்றுவிடாமல், 2026-இல் வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் 200-க்கும் அதிகமான தொகுதிகளில் வெல்லத் தயாராவோம்” என்று முப்பெரும் விழாவில், அவர் எழுப்பிய முழக்கமும் இறுதியாக இடம் பெற்றுள்ளன.

தேர்தல் பரப்புரை நேரத்தில் எடுக்கப்பட்ட ‘புகைப்படங்கள்’, ‘கூட்டணிக் கட்சிகளுடனான இடப்பங்கீடு’, ‘தேர்தல் அறிக்கையின் சுருக்கம்’, ‘கருத்து விளக்கப்படங்கள்’, ‘தேர்தல் முடிவுகள்’ என ஒரு வெற்றியின் சிறப்பு வாய்ந்த ஆவணமாக வெளியாகி உள்ளது இந்த நூல்.


**...வாசிப்போம்.**

**40/40 வரலாற்றுச் சாதனை போல இந்தப் புத்தகமும் ஓர் வரலாற்றுத் தேர்தல் ஆவணமாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

596

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131